GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**FA7A**

**6582–25**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Five-year Regular Course)

Fourth Year – Seventh Semester

BANKING LAW

Time : $2\frac{1}{2}$ hours | Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. State and explain the attachment of deposits by the Income Tax Authorities.

   வருமான வரி துறையால் வைப்பீடுகள் பற்றுகை செய்யப்படல் என்பதை விளக்குக.

2. Bring out the similarities and differences between Commercial Banks and Co–operative Banks

   வணிக வங்கிகளுக்கும் கூட்டுறவு வங்கிகளுக்கும் உள்ள ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் விளக்குக.

3. Define "Banker" and "Customer". Explain about the special types of customers to a banker.

   "வங்கியர்" மற்றும் "வாடிக்கையாளர்" என்பதை வரையறை செய்து ஓர் வங்கியரின் சிறப்பு வாடிக்கையாளர்கள் பற்றி விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Discuss in detail about the recent trends in banking system.

   வங்கி அமைப்பில் சமீபத்திய போக்குகள் பற்றி விரிவாக விவாதிக்கவும்.

5. Examine the nature of protection given to the collecting banker.

   பணம் வசூலிக்கும் வங்கியருக்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பின் தன்மையைப் பற்றி ஆராய்க.

6. What are the criminal remedies available to the drawee in case of dishonour of cheque under the Negotiable Instruments Act 1881?

மாற்றுமுறையாவணச் சட்டம் 1881–ன் கீழ் ஒரு காசோலை மறுதலிக்கக்கூடிய நிலையில் காசோலை பெற்றவருக்கு கிடைக்கக்கூடிய குற்றவியல் தீர்வழிகள் யாவை?

## PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக

(a) Crossing of cheque

காசோலை கோடிடல்

(b) Privileges of holder-in-due course

முறைப்படி உடையவரின் சலுகைகள்

(c) Financial Institutions Act, 1993.

நிதி நிறுவனங்கள் சட்டம், 1993.

(d) Vicarious liability of bank

வங்கியின் பகரப் பொறுப்பு

(e) Presumption

துணிபு

(f) Noting and Protest

மறுப்புக்குறிப்பும் மறுத்துரையும்

(g) Fixed Deposit receipt

நிலை வைப்பீடு ரசீது

## PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' issued a bearer cheque to 'B' for Rs. 50,000/-. 'B' lost the cheque. 'C' who found the cheque presented it in the bank and received the money. Discuss the liability of the bank.

'அ' என்பவர் 'ஆ' என்பவருக்கு ரூ. 50,000/-க்கு கொணர்பவர் காசோலை ஒன்றை வரைந்தார். 'ஆ' அந்தக் காசோலையை தவற விட்டார். அந்தக் காசோலையை கண்டெடுத்த 'இ' என்பவா வங்கியில் அதை கொடுத்து பணம் பெற்றுக் கொண்டார். வங்கியின் பொறுப்படைவு என்ன?

9. 'x' promises 'y' by way of promissory note to pay 'y' a sum of Rs. 70,000/- in the event of 'y' marrying 'c'. 'y' married 'c'. 'x' refused to pay the sum on the promissory note. Decide.

'y' என்பவர் 'c'யை திருமணம் செய்து கொண்டால் ரூ. 70,000/- தருவதாக 'x' என்பவர் கடனுறுதிச் சீட்டினை அளிக்கிறார். 'y' என்பவர் 'c'யை திருமணம் செய்து விட்டார். ஆனால் 'x', கடனுறுதிச் சீட்டில் உள்ள பணத்தை அளிக்க மறுத்து விடுகிறார். தீர்மானிக்க.

10. 'x' borrows Rs. 10,000/- from 'y' bank. 'z' stands as surety with regard to the repayment of loan. Thereafter 'x' and 'y' agree that 'x' may repay Rs. 5,000/- instead of Rs. 10,000/- Decide the liability of 'z'.

'x' என்பவர் 'y' வங்கியிலிருந்து ரூபாய் 10,000/- கடனாகப் பெற்றார். மேற்படி கடனுக்கு 'z' பிணையாளராக ஏற்று கடனை திரும்ப செலுத்த சம்மதிக்கின்றார். அதன் பிறகு 'x' மற்றும் 'y' இணைந்து 'x' என்பவர் ரூபாய் 10,000க்கு பதிலாக ரூ. 5,000/- திருப்பிக் கொடுக்கலாம் என்று உடன்படுகின்றனர். 'z' என்பவரின் பொறுப்பு நிலை என்ன?

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No.

**FA7B**

**6583–25**

(For the candidates admitted from 2017–2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Five-year Regular Course)

Fourth Year – Seventh Semester

LABOUR LAW – II

Time : $2\frac{1}{2}$ hours                                   Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the doctrine of notional extension of time and place of the employer, with the help of decided cases.

   பணி வழங்குநரின் பணியிடம் மற்றும் பணிநேரம் இவற்றை கருத்தளவில் விரிவுபடுத்தல் என்னும் கோட்பாட்டைத் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளோடு விளக்குக.

2. Define 'Factory'. Explain the powers and functions of Inspector of factories under the Factories Act.

   தொழிற்சாலையை வரையறுக்கவும். தொழிற்சாலை ஆய்வாளரின் அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளை தொழிற்சாலைகள் சட்டத்தின் கீழ் விளக்கவும்.

3. State the Constitution of ESI Court and list out the matters to be decided by the ESI Court.

   தொழிலாளர் அரசு காப்பீட்டு நீதிமன்ற அமைப்பைப் பற்றியும் அது எந்தெந்த விஷயங்களைப் பற்றி சட்ட தீர்வு காணுகிறது என்பதைப் பட்டியலிட்டு விளக்குக.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the determination of gratuity under the Payment of Gratuity Act, 1972.

   பணிக்கொடை நிர்ணயித்தல் பற்றி பணிக்கொடை வழங்கல் சட்டம் 1972–ன் கீழ் விவரிக்க.

5. Define Bonus. Explain the kinds of Bonus.

   மீதூதியம் என்பதை வரையறு மற்றும் அதன் வகைகளைப் பற்றி விவரிக்க.

6. State the benefits available to a pregnant woman under the Maternity Benefits Act, 1961?

பேறுகால சலுகைகள் சட்டம் 1961ன் கீழ் ஒரு கர்ப்பிணி பெண்ணுக்கு வழங்கக் கூடிய நலன்கள் யாவை?

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Personal Injury.

உடல் தீங்கு.

(b) Continuous Service

இடையறாத சேவை.

(c) Fencing of Machinery.

இயந்திரத்தை வேலியடைத்தல்.

(d) Set on and set off.

ஒதுக்கிவைத்தல் மற்றும் எதிரீடு.

(e) Employees' Family Pension Scheme.

தொழிலாளிகள் குடும்ப ஓய்வூதியத் திட்டம்.

(f) Jurisdiction of ESI court.

பணியாளர் அரசு காப்பீடு நீதிமன்றத்தின் அதிகார எல்லை

(g) Opening and closing hours under T.N. Shops and Establishments Act.

தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் திறக்கும் நேரம் மற்றும் மூடும் நேரம்.

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Murugesh is an employee of "Kannan Devan" Tea Plantation in Ooty. He was terminated from service for disablement due to an accident. He has completed four years of continuous service. Is he entitled to claim gratuity?

ஊட்டியில் உள்ள 'கண்ணன் தேவன்' தேயிலை தோட்டத்தில் முருகேஷ் என்பவர் ஒரு பணியாளர். ஒரு விபத்தின் காரணமாக ஏற்பட்ட உடற்தகுதியிழப்பின் காரணமாக அவர் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டார். அவர் நான்கு ஆண்டுகள் தொடர்ச்சியான பணியினை நிறைவு செய்தவர். அவர் பணிக்கொடை கோர இயலுமா?

9. Raja Part-time doctor is employed for an ambulance room as required under the Factories Act, 1948. Decide whether he is an worker or not.

ராஜா என்கிற பகுதி நேர மருத்துவர் தொழிற்சாலைகள் சட்டம் 1948–ன் படி ஆம்புலன்ஸ் அறையில் பணிபுரிகிறார். அவர் தொழிற்சாலைகள் சட்டம், 1948ன் கீழ் பணி அமர்த்தப்பட்டிருப்பின் அவர் தொழிலாளியா இல்லையா என்பதனை முடிவு செய்க.

10. Seetha was in Maternity leave, during such period she received a notice of dismissal from her employer. Discuss the effect of the notice of dismissal given to Seetha by the employer.

சீதா என்பவர் மகப்பேறு விடுப்பில் இருக்கும் ஒரு தொழிலாளி. அக்காலத்தில் முதலாளி அவருக்கு பணி நீக்க அறிவிப்பு கொடுத்தார். இவ்வறிவிப்பின் செயல் திறனை விவாதிக்கவும்.

———————

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**BA7C**

**6584–25**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Five-year Regular Course)

Fourth Year – Seventh Semester

ENVIRONMENTAL LAW

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Discuss the socio-economic dimensions of Environment.

   சுற்றுப்புறச் சூழலின் சமூக – பொருளாதார பரிமாணங்களை விவாதிக்க.

2. Analyse the contribution of Vellore Citizens Welfare Forum (vs) Union of India on Sustainable Development Principles in India.

   இந்தியாவில் தாங்கக்கூடிய வளர்ச்சி கொள்கைகள் குறித்து வேலூர் குடிமக்கள் நல மன்றம் (எதிர்) இந்திய அரசு வழக்கின் பங்களிப்பை ஆய்வு செய்க.

3. Discuss the obligation for relief under no fault liability.

   தவறின்மை பொறுப்புக் கோட்பாட்டின் அடிப்படையில் நிவாரணம் வழங்கும் இடப்பாட்டினை விவாதிக்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Explain the constitutional provisions with respect to environmental protection.

   சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு இந்திய அரசமைப்புச் சட்டத்தில் குறிப்பிட்டிருக்கும் வகையங்களை விளக்குக.

5. Discuss the powers of the central government in establishing sanctuaries and national parks.

   வன விலங்கு சரணாலயம் மற்றும் தேசிய பூங்காக்கள் அமைக்கும் மத்திய அரசின் அதிகாரங்களை விவாதிக்க.

6. Examine the various provisions of the Criminal Procedure Code regarding abatement of environmental pollution.

சுற்றுப்புறச்சூழல் மாசுகளை அகற்றுவது குறித்து குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் உள்ள வகைமுறைகளை ஆராய்க.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக :

(a) Green Tribunal

பசுமைத் தீர்ப்பாயம்

(b) Reserve Forest

ஒதுக்கப்பட்ட காடு

(c) E-Waste

இ–கழிவு

(d) Wet-lands

நன்செய் நிலங்கள்

(e) Inter-Generational Equity

தலைமுறைகளுக்கிடையேயான தகைமை நெறி

(f) Global warming

புவி வெப்பமடைதல்

(g) Public Trust Doctrine

பொது பொறுப்பாட்சிக் கோட்பாடு

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. The State government commenced a project of construction of a dam. "Aandolan Bacchavo" an activist group, filed a case against the project. Decide.

அணை கட்டுமானத் திட்டத்தை மாநில அரசு துவங்கியது. 'ஆந்தோலன் பச்சாவோ' என்ற ஆர்வலர் குழு இத்திட்டத்தை தடை செய்ய வேண்டும் என்று வழக்கிட்டது. – தீர்மானிக்க.

9. A private hospital with 100 beds facility did not have proper incinerators to treat Bio-medical waste. A case was filed against the hospital that it violates existing rules – Decide.

நூறு படுக்கைகள் வசதி கொண்ட தனியார் மருத்துவமனையில் உயிரி மருத்துவ கழிவு சிகிச்சைக்கான எரியூட்டி உபகரணங்கள் அமைக்கப்படவில்லை. இது நடைமுறை விதிகளை மீறும் செயல் என்று மருத்துவமனையை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. தீர்மானிக்க.

10. A private person without any licence extracts medicinal plants from the protected forest and trades with a foreign company. Forest authorities seized the medicinal plants and prosecuted him. Decide.

ஒரு தனி நபர் உரிமம் பெறாமல் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியில் இருந்து மருத்துவச் செடிகளை சேகரித்து வெளிநாட்டு நிறுவனத்துடன் வணிகம்

செய்து வந்தார். வன அலுவலர்கள் அந்த மருத்துவச் செடிகளை பறிமுதல் செய்து அவர் மீது குற்ற வழக்கு தொடரப்பட்டது. தீர்மானிக்க.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY

Register No. | | | | | | | | |

**FA7D**

**6585–25**

(For the candidates admitted from 2017 – 2018 onwards)

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATIONS, MAY 2025.

(Five–year Regular Course)

Fourth Year – Seventh Semester

ADMINISTRATIVE LAW

Time : $2\frac{1}{2}$ hours Maximum : 70 marks

PART A — (2 × 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. The absolute theory of Separation of Power is not possible – Explain.
முழுமையான அதிகார பகிர்வு கோட்பாடு என்பது சாத்தியமற்றது – விளக்குக.

2. Discuss the parliamentary control of Delegated Legislation in India.
இந்தியாவில் ஒப்படைவு சட்டத்தை பாராளுமன்றம் மூலம் கட்டுப்படுத்துவதை விவாதிக்க.

3. Discuss the grounds of Judicial review of administrative discretion in India.
இந்தியாவில் நிர்வாகத்தின் விருப்புரிமையைக் கட்டுப்படுத்தப் பயன்படும் நீதிமுறை மறு ஆய்விற்கான காரணங்களை விவாதிக்க.

PART B — (2 × 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each :

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. State the various differences between Court and Administrative Tribunals.
நிர்வாகத் தீர்ப்பாயத்திற்கும் நீதிமன்றத்திற்கும் உள்ள பல்வேறு வேறுபாடுகளைக் கூறுக.

5. Explain the origin and scope of the Ombudsman.
குறை தீர்வாளர் அமைப்பின் நோக்கம் மற்றும் நோக்கெல்லையை விளக்குக.

6. Explain the salient features of Public Corporations.
பொதுத்துறை நிறுவனங்களின் சிறப்பியல்புகளை விளக்குக.

PART C — (5 × 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following :

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக:

(a) Committee on Subordinate Legislation

துணை சட்டக் குழுக்கள்

(b) Essential Legislative Function

முக்கிய சட்டப் பணிகள்

(c) Government Control of Corporation

கூட்டுருவின் அரசு கட்டுப்பாடு

(d) Civil Law remedies

உரிமையியல் சட்டப் பரிகாரங்கள்

(e) Types of Conditional Legislation

நிபந்தனை சட்டத்தின் வகைகள்

(f) Exclusion of Jurisidiction

அதிகார வரம்பை விலக்கல்

(g) Locus Standi

வழக்காடும் உரிமை

PART D — (2 × 6 = 12 marks)

Answer TWO of the following by referring to the relevant provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. Air India in exercise of statutory powers has framed service rules according to which the service of Air hostess can be terminated on her first pregnancy. Decide the validity of the rule.

ஏர் இந்தியா நிறுவனம் தனது சட்டத்தால் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் உருவாக்கப்பட்ட பணிவிதிகளின் படி ஒரு விமானப் பணிப்பெண் முதல் கருவுற்ற உடன் பணி நீக்கம் செய்யப்படுவார் என்ற விதியினை இயற்றியது. இந்த விதியின் செல்லும் தன்மையை தீர்மானிக்கவும்.

9. In the year 2023, the government announced 2 years tax holiday for those who set up establishments in the industrially backward districts. In the year 2024 the govt. withdrew the tax holiday. Those who have set up industries challenged the order–Decide.

தொழிலில் பின்தங்கிய மாவட்டங்களில் தொழிலகங்களை தொடங்குபவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரிச் சலுகை வழங்கப்படும் என்று 2023–ம் ஆண்டில் அரசு ஆணை பிறப்பித்தது. ஆனால் 2024ம் ஆண்டில் அரசு அவ்வாணையை திரும்பபெற்றது. தொழிற்சாலை தொடங்கியவர்கள் அவ்வாணையை எதிர்க்கிறார்கள். முடிவு காண்க.

10. In the Parent Act there is a provision to publish delegated legislation in the local Tamil daily before implementation. The govt. published the delegated legislation in the English daily. Decide the validity of the delegated legislation.

அடிப்படை சட்டமானது அதன் கீழ் அரசால் உருவாக்கப்படும் விதி ஆக்கங்களை, அவற்றை செயல்படுத்தும் முன் உள்ளூர் தமிழ் நாளேட்டில் வெளியிட வகை செய்கிறது. ஆனால் அரசானது அதனை ஆங்கில நாளேட்டில் வெளியிடுகிறது. அந்த விதிகளின் செல்லும் தன்மையை ஆராய்க.

---

GOVERNMENT LAW COLLEGE, TRICHY
LIBRARY